23.03.2022
C.C. No.59/2020
அ.சா. 1 விமலன்
<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>...

2017 ஆம் ஆண்டு ஜுன் மாதம் உங்களுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். என் மனைவி வழக்கறிஞர். உங்கள் திருமணத்திற்கு பிறகு தான் நீங்கள் தற்போது வைத்திருக்கும் அலுவலகத்தில் கிரகபிரவேசம் நடைபெற்றது என்றால் சரிதான் ( அந்த காலகட்டத்தில் தான் நடைபெற்றது ). உங்கள் மகள் பிறந்த பிறகு தான் கிரகபிரவேசம் நடைபெற்றது என்றால் சரியாக நியாபகமில்லை. நீங்களும் இந்த வழக்கின் எதிரியின் மனைவியும் திங்கள் நகர் ரவுண்டானா அலுவலம் வைத்திருந்தீர்கள் என்றால் சரியல்ல, நான் தான் அலுவலகம் வைத்திருந்தேன். அவர் என்னிடம் வேலை செய்து வந்தார். தற்போதும் நீங்கள் வைத்திருக்கும் அலுவலகம் மற்றும் திங்கள் நகர் ரவுண்டானா அலுவலகத்தில் அலுவலகத்தின் முன்பு அவர் பெயர் ( இந்திரா) தான் முதலில் இருக்கும் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் வேலை மட்டும் தான் செய்து வருகிறேன். பணம் வட்டிக்கு விடும் தொழில் செய்யவில்லை. நீங்கள் தாக்கல் செய்த புகார்மனு மற்றும் முதல் விசாரணையில் ரூ 3,13,400 வாங்கியதாக தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் நீங்கள் தாக்கல் செய்த புதசாஆ.1 காசோலையில் தொகையானது ரூ 3,50,000 என குறிப்பிடப்பட்டுளளது எனறால் சரிதான், எதிரியாக தான் எனக்கு தருவதாக கூறிய பணம் தான் அது. நீங்கள் தாக்கல் செய்த புகார் மற்றும் வாக்குமூலத்தில் ரூ. 3,50,000 எந்த வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கடந்த 3 வருடங்களாக வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன். நீங்கள் எதிரி மற்றும் எதிரியின் மனைவி மீது 10.06.2020 அன்று இரணியல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தீர்கள் என்றால் சரிதான். மேற்படி நீங்கள் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் இவ்வழக்கு காசோலை குறித்து எதுவும் குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் கொடுத்த புகாரின் மீது இரணியல் காவல் துறையினா் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் நடவடிக்கை எடுக்காதது சம்பந்தமாக

இரணியல், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கு.வி.மு.ச. 156(3) இன் படி மனு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மனு என்னால் இரணியல் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட குவிமுச 156(3) மனுதான். அது Ex.D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரணியல், நீதித்துறை நடுவா் காவல் துறைக்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டு அவர்கள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த அறிக்கை Ex.D2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரணியல், நீதித்துறை நடுவா் அவர்கள் Cmp No. 1204/2020 வழக்கில் போலீசாா் தாக்கல் செய்த அறிக்கையினை பரிசீலனை செய்து முடிக்கப்பட்ட உத்தரவானது Ex.D3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் போலீசாா் எந்த சாட்சிகளையும் விசாரிக்காமல் அறிக்கை சமர்ப்பித்ததால், நான் இவ்வழக்கின் எதிரி மற்றும் அவரது மனைவி மீது இரணியல், நீதித்துறை நடுவா் நீதிமன்றத்தில தனியாா் வழக்கு தாக்கல் செய்து தற்போது நிலுவையில் இருந்து வருகிறது. நீங்கள் தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் ரூ. 3,13,400 குறித்து கணக்கு சமர்ப்பித்துள்ளீர்களா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு இன்னாா்க்கு கொடுத்ததாக கணக்கு சமர்ப்பிக்கவில்லை. உங்களுடைய வாட்ஸ்சப் நம்பா் 9789968469 என்றால் சரிதான். எதிரியின் மனைவியின் வாட்ஸ்சப் எண் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆனால் மனப்பாடமாக தெரியாது. இவ்வழக்கு பிரச்சனைக்கு முன்பாக நீங்கள் எதிரியின் மனைவிக்கு வாட்ஸ்சப் மூலமாக மெசேஜ் அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரிதான். எதிரியின் மனைவி உங்களுக்கு அனுப்பிய வாட்ஸ்சப்` செய்தியில் அவருடைய சொத்து பத்திரம் உங்களிடம் உள்ளது என்று மெசேஜ் செய்துள்ளாா்கள் என்றால் சரியல்ல. உங்களிடம் காட்டப்படும் வாட்ஸ்சப் செய்தியில் "டாக்குமெண்ட் கேட்டாச்சி, 3 மாதம் வட்டி பணம் நானும் கொடுக்கவில்லை, சிவானந்தம் என்பவரும் கொடுக்கவில்லை, இது 4வது மாதம், ரூ. 6 இலட்சம் மற்றும் அதற்கான வட்டியை செலுத்தி முடித்துக்கொள்ள சொல்லுகிறேன்" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் பேப்பரில் அவ்வாறு தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேலும் என்னிடம் காட்டப்படும் பேப்பரில் ரூ. 3 இலட்சம் மற்றும்

வட்டி செலுத்தினால் பத்திரம் தருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் பேப்பரில் அவ்வாறு தட்டச்சு செய்யப்பட்டுள்ளது, மேலும் என்னிடம் காட்டப்படும் பேப்பரில் அவரின் பத்திரம் என்று குறிப்பிடப்படவில்லை. நீங்கள் பத்திரம் என குறிப்பிட்டு சொல்லுவது டாக்குமெண்ட நம்பர் 2512/2010 என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி டாக்குமெண்ட் 2512/2010 சம்பந்தமாக நீதிமன்றத்தில் அசல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொல்லப்பட்டுள்ள டாக்குமென்ட் சம்பந்தமாக அசல் வழக்கு எண் 29/2020 இரணியல் சார்பு நீதிமன்றத்தில் உங்கள் மூலமாக வாதியாக ஸ்ரீனிவாசசுந்தர் என்பவர் மூலமாக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேலதர்மபுரம் ஊரை சேர்ந்த நடராஜன் உங்கள் உடன்பிறந்த சகோதரியின் கணவர் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து காணமல் போன 8 காசோலைகளில் 1 காசோலை உங்கள் சகோதரியின கணவர் நடராஜன் வாதியாக அசல் வழக்கு எண் 272/2020 நாகர்கோவில், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பின்பு வனவழக்கு நீதிமன்றத்தில் மாற்றப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அந்த வழக்கிலும் இந்த வழக்கின் எதிரி ஷிபு என்பவர் என் சகோதரியின் கணவரிடம் பணம் வாங்கி வழக்கு நடந்து வருவதாக கேள்விபட்டேன். மேற்படி நீங்கள் இரணியல், சார்பு நீதிமன்றத்தின் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கின் வாதி உங்கள் நண்பர் மற்றும் வாதி என்றால் சரிதான். மேற்படி இவ்வழக்கின் எதிரியின் மனைவி அவருடைய கட்சிகாரரான ஸ்ரீனிவாசசுந்தர் அவரை அணுகி காசோலை வழக்கை நடத்துமாறு கேட்டதற்கு அவர் குற்றவியல் வழக்குகள் பார்க்கமாட்டார் என்பதால் மேற்படி ஸ்ரீனிவாசசுந்தர் என்பவரை எனக்கு அறிமுகம் செய்து, பின்னர் இதே நீதிமன்றத்தில் அவர் வாதியாக அவருக்கு வழக்கறிஞராக ஒரு வழக்கில் உள்ளேன். மேற்படி ஸ்ரீனிவாசசுந்தர் என்பவர் எதிரியின் மனைவிக்கு கட்சிக்காரர் என்று இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்களும் ஸ்ரீனிவாசசுந்தர் என்பவரும் ஒரே பள்ளியில் படித்து வந்தவர்கள் என்றால் சரியல்ல. மேற்படி

ஸ்ரீனிவாசசுந்தார் உங்கள் ஊர் பக்கத்தில் உள்ள தேம்பிறவிளை என்றால் சரிதான், நான் குடியிருக்கும் ஊரிலிருந்து 5 கிமீ தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 5கி.மீ என்று வழக்கிற்காக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஸ்ரீனிவாசசுந்தர் என்பவருக்காக மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் AOP 8/2019 வழக்கிலும் நீங்கள் தான் வழக்கறிஞர் என்றால் சரியல்ல. எதிரி மற்றும் அவருடைய மனைவி இருவரும் மேற்படி ஸ்ரீனிவாசசுந்தர் என்பவரை ஏமாற்றிவிட்டதாகவும் இந்த நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள STC 6/2019 வழக்கு தவிர்த்து எந்த வழக்கிற்கும் என்னிடம் வந்ததில்லை. ஜெஸ்டின் ஜெயகுமார் உங்களுடைய நண்பர் மற்றும் உங்களுடைய கட்சிகாரர் என்றால் சரியல்ல, அவர் எதிரியின் மனைவியின் கட்சிக்காரர். மேற்படி ஜெஸ்டின் ஜெயகுமார் உடையார்விளையை சேர்ந்தவர் என்றால் சரியல்ல, உடையார்விளை தள்ளி 2 கி.மீ தள்ளி மேற்கு நெய்யூரில் வசித்துவருகிறார். IDOP நம்பர் 448/2014 என்ற வழக்கில் நீங்கள் தான் மேற்படி ஜெஸ்டின் ஜெயகுமார் என்பவரின் வழக்கறிஞர் என்றால் சரியல்ல, எதிரியின் மனைவி தான் வழக்கறிஞர். மேலும் IDOP 448/2014 நீதிமன்ற உத்தரவு நகல் Ex.P6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கின் வக்காலத்து நாமாவில் நீங்கள் கையெழுத்து செய்துள்ளீர்கள் என்றால் இருக்கலாம், எங்கள் அலுவலகத்தின் மூலம் நடத்திய வழக்குகளில் எங்கள் இருவரின் கையெழுத்தும் போடுவோம். காணமால் போன 8 காசோலைகளில் மற்றொரு காசோலை சம்பந்தமாக உங்கள் திருச்சி நண்பர் இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக வழக்கறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் எதிரியின் காசோலை காணாமல் போன விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் கொடுத்த 1 காசோலை மட்டும் எனக்கு தெரியும். மேலும் திருச்சியில் எனக்கு எந்த நண்பரும் கிடையாது. நீங்கள் மின்சார வாரிய இளநிலை பொறியாளர் ராஜசேகர் என்பவர் மீது பொய் புகார் கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல, உண்மையான புகார். மேற்படி நீங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் சிசி நம்பர் 376/2008 என்ற தனி வழக்கு நீங்கள் வழக்கு நடத்தாமல் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி

சிசி நம்பர் 378/2008 வழக்கு 21.10.2021 அன்று எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. நீங்கள் இவ்வழக்கின் எதிரி மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளித்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல.